# காலாண்டு பொதுத்தேர்வு. செப்டம்பர் --2019

ஒன்பதாம் வகுப்பு தமிழ் இரண்டாம் தாள்

நேரம் 2.30 மணி. மதிப்பெண் 100

அ.பின்வரும் வினாக்களில் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து ( 14*1=14

1 செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை

அ. தன்வினை ஆ.பிறவினை இ.செய்வினை ஈ. செயப்பாட்டு வினை

2 பகுபத உறுப்புகள் மொத்தம்

அ. மூன்று. ஆ.நான்கு இ.ஐந்து. ஈ.ஆறு

3 காலம் காட்டும் இடைநிலைகளில் கின்று என்பது----------

அ. நிகழ்கால இடைநிலை. ஆ. இறந்தகால இடைநிலை. இ. எதிர்கால இடைநிலை. ஈ. இவற்றுள் ஏதுமில்லை

4 ---------வினையே திணை, பால், இடம், காலம் காட்டும்

அ.கூட்டு. ஆ.முதல். இ.துணை. ஈ.இறுதி

5 பேச்சு மொழியில் ----------வினை ஆதிக்கம் அதிகமாக உள்ளது

அ. முதல்வினை. ஆ. இரண்டாம் வினை இ. துணைவினை. ஈ. தனிவினை

6 -------------வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்

அ. இரண்டாம். ஆ. மூன்றாம். இ. நான்காம். ஈ. ஐந்தாம்

7 வல்லினம் மிகும் எண்ணுப்பெயர்கள்

அ.எட்டு. ஆ. பத்து. இ. இவை இரண்டும். ஈ. இவற்றுள் ஏதுமில்லை

8 -------- சொற்களின் பின்னர் வல்லினம் மிகும்

அ.பெயர் ஆ.வினை. இ.இடை. ஈ.உரி

9 ------------------இல் வல்லினம் மிகாது

அ.பெயரெச்சம். ஆ. வினையெச்சம் இ .முற்றெச்சம் ஈ.எதிர்மறைப் பெயரெச்சம்

10 உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது என்பதற்கு சான்று

அ. தாயும் தந்தையும். ஆ. தாய் தந்தை. இ. இவற்றுள் ஏதுமில்லை. ஈ. விரிகடல்

11 -----------------தொடரில் வல்லினம் மிகாது

அ. பெயரெச்சத் . ஆ. வினையெச்சத் இ.முற்றெச்சத் ஈ. எழுவாய்

12 ஆடுகொடி என்பதன் இலக்கணக்குறிப்பு

அ.வேற்றுமைத் தொகை ஆ.வினைத் தொகை இ.உவமைத் தொகை ஈ.உம்மைத் தொகை

13 எழுவாய் தொடருக்குச். சான்று

அ. பாரி கேட்டான். ஆ. கேட்டான் பாரி. இ. கேட்டது பாரியா?. இவற்றுள் ஏதுமில்லை

14 நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல்

அ. அகத்தியம். ஆ. தொல்காப்பியம். இ. நன்னூல். ஈ. தண்டியலங்காரம்

## பகுதி--2. மதிப்பெண்கள்-30

பிரிவு--1. (ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி) 5*2=10

15 பாடம் கண்ணனால். படிக்கப்பட்டது . இத்தொடரைச் --செய்வினை வாக்கியமாக மாற்றுக

16 மூவேந்தர்களின் புகழானது ஐவகை நிலங்களிலும் பரவியது. இத்தொடரில் உள்ள தொகைச் சொற்களைப் பிரித்தெழுதுக மற்றும் அதற்குரிய தமிழ் எண்களையும் எழுதுக.

17 கலைச்சொல் தருக. Lexicon ,. Comparative Grammar

18 கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்தி புதிய தொடர்களை உருவாக்குக

அ. வேண்டும். ஆ. முயன்றால் முடியும்

19 சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக

அ. குழந்தை சிரித்தது. ஆ. மழை பெய்தது

20 ஒரே தொடரில் இருவினைகள் வருமாறு தொடர் அமைக்க

அ.பணிந்து- பணித்து. : ஆ. பொருந்து-- பொறுத்து:

21 சின்னக்கொடி--- சின்ன கொடி இத்தொடர் தரும் பொருளை எழுதுக

பிரிவு- 2 (ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி) 5*2=10

22 எழுவாய் என்றால் என்ன?

23 கூட்டு வினைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

23 பொதுவியல் திணை-- குறிப்பு தருக

24 வினையோடு வந்தாள் : கிளியே பேசு . தொடரின் வகையைச் சுட்டுக

25 வல்லினம் மிகும் இடங்களுக்கு இரு சான்று தருக

26 பெயரடை என்றால் என்ன?

27 வல்லினம் மிகா இடங்களுக்கு இரு சான்று தருக

பிரிவு-3. (ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் ) 2*5=10

28 தன்வினை மற்றும் பிறவினைகளை விளக்குக

29 வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுடன் விவரிக்க

30 அகழ்வாரை தாங்கும் நிலம் போல தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை
-இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை சுட்டி விளக்குக

பகுதி 3 மதிப்பெண்கள் 20 4*5=20

31 மழை என்னும் தலைப்பில் எட்டு வரிகளில் மிகாமல் செய்யுள் வடிவில் கவிதை இயற்றுக

32 பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கலைச்சொல் அறிக

அ. Launch vehicle

ஆ. Missile

இ. Nautical mile

ஈ. Download

உ. Electronic devices

33 பா நயம் பாராட்டுக

விரிகின்ற நெடுவானில் , கடற்பரப்பில்
விண்ணுக்கு பெருமலையில் , பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவி பொழிலில், காட்டில்
புல்வெளியில் நல் வயலில்,. விலங்கில் புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண் பாட்டே.,. தூய்மை ஊற்றே
அழகு என்னும் பேர் ஒழுங்கே., மெய்யே ,மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

_ம.இலெ.தங்கப்பா

34 கண்ணன் தன் நண்பன் ராமனுடன் சாலையை கடக்க முற்படுகிறான் அப்பொழுது அவர்கள் அருகே கண்பார்வை அற்ற மாற்றுத்திறனாளி நிற்கிறார். சொற்றொடர்களை உருவாக்கி கதைப் பகுதியை நிறைவு செய்க

பகுதி 4 2*5=10

35 தண்ணீர் சிறுகதையினைக் கருத்தும் கருப்பொருளும் குறையாமல் சுருக்கி வரைக

(அல்லது)

வளரும் செல்வம் உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து இணையான தமிழ் சொற்களை பட்டியலிடுக

36 பண்பாட்டுக் கூறுகளை பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களை

தொகுத்து எழுதுக

(அல்லது)

இந்திய விண்வெளித் துறையின் சாதனைகளைப் பற்றி தொகுத்து எழுதுக 2*5=10

பகுதி 5

37 அகராதியில் அமைந்துள்ள படி கலைச் சொற்களுக்கான தமிழாக்கம் தருக

அ.கரிப்பு

ஆ.குருசு

இ.தரிசு

ஈ.விசனம்

உ.நீரதம்

38 பின் வரும் பத்தியினைப் படித்து தமிழ் மொழியில் மொழி பெயர்த்து எழுதுக

Water Music

Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound.
The more the bottle vibrates, the higher the note will be.The more water
in a bottle, the less it vibrates,so less water means higher notes.

பகுதி 6 2*8=16

39 நீ வசிக்கும் பகுதியில் நூலக வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் வரைக

(அல்லது)

உங்கள் ஊரின் பழுதடைந்த சாலைகளை செப்பனிட்டு தர சம்பந்தப்பட்ட
நெடுஞ்சாலைத்துறை பொறியாளருக்கு கூட்டு விண்ணப்பம் வரைக

40 மழை நீர் சேமிப்பு குறித்து கட்டுரை வரைக

(அல்லது)

தற்காலத்தில் தானியங்கி எந்திரங்களின் பயன்பாடு குறித்து கட்டுரை வரைக

வினாத்தாள் வடிவமைப்பு

பா. செல்வகுமார்.M.A.D.T.Ed.,
பட்டதாரி தமிழாசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
வலையங்குளம்
மதுரை 62 50 22
அலைபேசி எண் 9500930174